வகுப்பு 12 பள்ளிக்கல்வித்துறை

பாடம்:வரலாறு காலாண்டுத்தேர்வு ,செப். -2024 – விடைக்குறிப்புகள்

பகுதி -அ

**சரியான விடை.**

| | |
|---|---|
| 1. (இ) A.O. ஹியூம் | 11. (இ) எஸ்.ஏ. டாங்கே |
| 2. (இ)தாதாபாய்நௌரோஜி | 12. (இ) சையது அமீர்அலி |
| 3. (ஈ) லாலாலஜபதி ராய் | 13. (ஈ) 22 டிசம்பர், 1939 |
| 4. அ) கூற்று மற்றும் காரணம் சரி. காரணம் கூற்றைவிளக்குகிறது. | 14. இ.2015 |
| 5. (ஆ) மதன்மோகன் மாளவியா | 15. (அ) ஜவஹர்லால் நேரு |
| 6. (இ) முஸ்லீம் லீக்கின் தனித்தொகுதி கோரிக்கையை காங்கிரஸ் ஏற்றுக் கொண்டது. | 16. அ) கூற்று மற்றும் காரணம் சரி; காரணம் கூற்றைவிளக்குகிறது |
| 7. ஆ.ராஜாஜி | 17. (ஆ) 3 4 2 1 |
| 8.(இ)அக்குழுவில்இந்தியர்கள் இடம்பெறவில்லை. | 18. (ஆ) பட்டாபி சீத்தாராமையா |
| 9. (ஆ) iii, ii, i, iv | 19. (இ) வினோபா பாவே |
| 10. (இ) இந்தியக் குடியரசு இராணுவம் | 20. (அ) 5 |

பகுதி – ஆ

**II.ஏதேனும் ஏழு வினாக்களுக்கு விடையளி. (கட்டாய வினா.30)**

| | | |
|---|---|---|
| 21. | **இந்திய நீதிபதிகள் ஐரோப்பியர்களை விசாரிக்க அதிகாரம் பெற்றனர்.**<br>**ஐரோப்பியர் எதிர்ப்பால் இம்மசோதாவில் திருத்தம் செய்யப்பட்டது.** | 2 |
| 22. | **பாலகங்காதர திலகர், பிபின்சந்திர பால், லாலாலஜபதிராய்.** | 2 |
| 23. | **முதல் உலகப்போரின் முடிவில் கலீபாவின் ஆளுமை முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது.**<br>**கலீபாவின் அதிகாரத்தைத் துண்டாடுவது இசுலாம் மீதான பெரும் தாக்குதலாகக் கருதப்பட்டது.** | 2 |
| 24. | **ஊருணிகள் மற்றும் கிணறுகளில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உரிமைகள மறுக்கப்பட்டிருந்தன.** | 2 |

| | | |
|---|---|---|
| | எனவே தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அடிப்படை உரிமைகளை மீட்டுத்தர இதனை தொடங்கினார். | |
| 25. | இந்தியாவின் முதல் வெற்றிகரமான தொழிலதிபர் என்பதால், இவர் அவ்வாறு அழைக்கப்படுகிறார். இவரால் நிறுவப்பட்ட வர்த்தக நிறுவனம் டாடா குழுமம் என்றானது. | 2 |
| 26. | தனித்தொகுதி முறையில் முஸ்லிம்கள் மட்டுமே முஸ்லிம் வேட்பாளருக்கு வாக்களிக்க முடியும். தனித்தொகுதி முறையில் இந்துக்கள் மற்றும் முஸ்லிம்களை முழுமையாக அந் நியப்படுத்தியது. | 2 |
| 27. | இரண்டாம் உலகப்போரின் போது ஜப்பானின் கட்டுப்பாட்டில் இருந்த போர்க்கைதிகள் மோகன்சிங்கின் தலைமையின் கீழ் விடப்பட்டனர். இவர்களில் 40,000 பேரைத் தேர்ந்தெடுத்து இந்திய தேசிய இராணுவத்தை மோகன் சிங் பலப்படுத்தினார். | 2 |
| 28. | ஜே.வி.பி. குழு பரிந்துரைகளின் முக்கியத்துவம் ஜே.வி.பி. குழு மொழிவாரி மாகாண கோரிக்கையை நிராகரித்தது "மொழியானது பிணைக்கும் ஆற்றலைக் கொண்டிருப்பதோடு பிரிக்கும் ஆற்றலும் உடையது" என்று இக்குழு குறிப்பிட்டது. | 2 |
| 29. | பொருளாதாரத்தை வளர்த்தல், வேளாண்துறையை மேம்படுத்துதல். வறுமையைக் குறைத்தல், வேலைவாய்ப்புகளைப் பெருக்குதல். | 2 |
| 30. | 'இந்திய தேசியத்தின் முதுபெரும் மனிதர்' எனஅறியப்படுபவர். - இந்திய சங்கம், கிழக்கிந்தியக் கழகம் உருவாக்கியவர். மூன்று முறைஇந்திய தேசிய காங்கிரசின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். | 2 |

பகுதி – இ

**<u>II.ஏதேனும் ஏழு வினாக்களுக்கு விடையளி. (கட்டாய வினா.40)</u>**

| | | |
|---|---|---|
| 31. | தன்னாட்சி, மக்களாட்சி, போன்ற நவீன சிந்தனைகளை மக்களுக்கு பரப்பிட அரசியலை விமர்சனம் செய்தன. நாட்டினைப் பாதிக்கும் பல்வேறு பிரச்சனைகள் குறித்து மக்களிடம் பேசின. | 3 |
| 32. | ஆங்கிலேயரின் அடக்குமுறை. – தூத்துக்குடியில் சுதேசி முயற்சிகள் அடக்கப்பட்டது -திருநெல்வேலி நிகழ்வுக்குப் பழிவாங்குதல். | 3 |
| 33. | பிரிட்டிஷ் ஆட்சியில் இந்தியாவில் தன்னாட்சியை ஏற்படுத்துவது. தாய்நாடு பற்றிய பெருமையுணர்வை இந்திய மக்களிடையே ஏற்படுத்துவது . இரு இயக்கங்களின் வரையறைகளும் தெளிவாக வகுக்கப்பட்டிருந்தன. | 3 |
| 34. | ஜோதிராவ் பூலே—இந்திய சமூக சீர்திருத்தவாதிகளில் சிறந்தவர். குலாம்கிரி என்ற நூலை எழுதியுள்ளார். | 3 |

| | | |
|---|---|---|
| | சத்திய சோதக் சமாஜம் என்ற அமைப்பை உருவாக்கினார். | |
| 35. | வகுப்புவாரித் தொகுதி ஒதுக்கீடு திருத்தப்பட்டது.<br>தனித் தொகுதிகளைப் பறித்துக் கொண்டது.<br>இடங்களின் ஒதுக்கீடு குறித்து உத்தரவாதமளிக்கப்பட்டது. | 3 |
| 36. | பீகாரிலுள்ள சாகி நகரில் டாடா இரும்பு மற்றும் எஃகு நிறுவனம் அமைக்கப்பட்டது.<br>சுதேசி இயக்கத்தின் ஒரு நிகழ்வாக இந் நிறுவனம் அமைக்கப்பட்டது.<br>இரும்பு மற்றும் எஃகு துறையில் மற்ற நிறுவனங்களை விட TISCO சிறப்பான நிலையை அடைந்தது. | 3 |
| 37. | முஸ்லிம்களுக்கு தனித்தொகுதியை வழங்கியது.<br>முஸ்லிம்களுக்கு அரசமைப்பு சார்ந்த அடையாளத்தை வழங்கியது.<br>ஆங்கிலேயரின் பிரித்தாளும் கோட்பாடு அரசமைப்பு சட்டத்தில் முறையாக நுழைந்து. | 3 |
| 38. | காங்கிரசின் முக்கிய தலைவர்கள் அவரோடு ஒத்துழைக்க மறுத்தனர்.<br>எனவே போஸ் பதவித் துறக்கவே, இராஜேந்திரப்பிரசாத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.<br>போஸ் காங்கிரசிற்குள் செயலாற்ற விரும்பி ஃபார்வர்டு பிளாக் கட்சியை உருவாக்கினார். | 3 |
| 39. | இந்திய அரசமைப்பின் தனித்தன்மைகள்<br>குடிமக்களுக்கு அடிப்படை உரிமைகள்.<br>சுதந்திரமான தேர்தல்ஆணையம்.<br>வயது வந்தோர் அனைவருக்குமான வாக்குரிமை.<br>நீதித்துறையின் சுதந்திரத் தன்மை. | 3 |
| 40. | இந்திய வேளாண்மையின் பின்தங்கிய நிலைக்கான காரணங்கள்<br>நிறுவனம் சார்ந்த காரணிகள் : நிலவுடைமை வர்க்கத்தை சேர்ந்தோருக்கும் விவசாயத் தொழிலாளர் வர்க்கத்தைச் சேர்ந்தோருக்குமிடையே நிலவிய சமூக பொருளாதார சிக்கல்.<br>தொழில்நுட்பக் காரணிகள் : சிறந்த விதைகள், ரசாயன உரங்கள், டிராக்டர் மற்றும் அறுவடை இயந்திரம், நீர்ப்பாசனவசதிகள் போன்றவற்றை பயன்படுத்தாமை ஆகும். | 3 |

பகுதி -ஈ

அனைத்து வினாக்களுக்கும் விடையளி

| | | |
|---|---|---|
| 41. அ. | இந்திய நடுத்தர வர்க்கத்தில் மேற்கத்தியக் கல்வியின் தாக்கம்;- ஒரு நவீன இந்திய கற்றறிந்தோர் பிரிவு-<br>வர்த்தகர்கள், நிலப்பிரபுக்கள், மருத்துவர்கள், வழக்கறிஞர்கள் - ஆங்கிலேய நிர்வாகத்துடன் இணக்கமாக செயல்பட்டனர். -சுதந்திர இந்தியாவில் மட்டுமே தங்களது விருப்பங்கள்<br>சமூகத்தைச் சீர்த்திருத்தவும், மீட்டுருவாக்கம் செய்திடவும் அது ஆற்றிய பங்கு -மக்களிடையே | 5 |

நாட்டுப்பற்று - தேசியம், மக்களாட்சி, சோஷலிசம் - ஆங்கிலக் கல்வியை கற்றோர் - சதி ஒழிப்பு, குழந்தைத் திருமண ஒழிப்பு, விதவைகள் மறுமணம்

**41. ஆ.** (5)

**இந்திய தேசிய இயக்கத்தில் வ. உ. சிதம்பரத்தின் பங்கு -**

சுதேசி நீராவிக் கப்பல் கம்பெனி

S.S.கலியா, S.S.லாவோ - இந்தியாவின் பண்டையகால கடற்பயணப் பெருமை

கோரல்மில் தொழிலாளர் போராட்டம் - தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் -

அரசு ஆலை நிர்வாகத்திற்கு ஆதரவாக இருந்தது. தொழிலாளர்களின் கோரிக்கைகளை ஏற்றுக் கொண்டனர்

பிபின் சந்திரபாலின் விடுதலையை கொண்டாடுதல் - சுதேசி தினம்- வ. உ. சி கைது -

இரட்டை ஆயுள் தண்டனை

**42. அ** (5)

**திலகர் கீழ் துவக்கப்பட்ட தன்னாட்சி இயக்கம்:**

பெல்காம் – ஆறு கிளைகள் - **தன்னாட்சி குறித்த கோரிக்கைகள் - மகாராஷ்டிரா மற்றும் கர்நாடகா - திலகர் கைது**

**அன்னிபெசண்ட் ஆகியோரின் கீழ் துவக்கப்பட்ட தன்னாட்சி இயக்கம்:**

மதராஸ் - **இந்தியா முழுவதும் தீவிரப் பயணம் – இந்திய விசுவாசத்தின் விலை இந்தியாவின் விடுதலை – மதராஸில் மிகவும் பிரபலம்.- ஊட்டியில் கைது.**

**42. ஆ** (5)

| ஒத்துழையாமை இயக்கம் | சட்டமறுப்பு இயக்கம் |
|---|---|
| தன்னாட்சி அரசு நிறுவப்படுவதை குறிக்கோளாக கொண்டு தொடங்கப்பட்டது. | முழுமையான சுதந்திரம் அடைவதை குறிக்கோளாக கொண்டு தொடங்கப்பட்டது. |
| ஒத்துழையாமை இயக்கம் நேர்மறை மற்றும் எதிர்மறை திட்டம் என இரண்டையும் கொண்டது | உப்பு மீதான வரியை அறவழியில் எதிர்க்கும் திட்டமிட்ட போராட்டமாக இருந்தது. |
| கலவரங்கள் மற்றும் மோசமான வன்முறைகள் நிகழ்ந்தன. | வன்முறையற்ற அறப்போர் என்ற போராட்டமாக திகழ்ந்தது. |
| சௌரி சௌரா சம்பவத்தின் விளைவாக இப்போராட்டம் நிறுத்தப்பட்டது. | அரசின் அடக்குமுறைகளால் இப்போராட்டம் முடிவுக்கு வந்தது. |

**43. அ** (5)

**காந்தியடிகளின் தொடக்ககால போராட்டங்கள் :**

சம்ப்ரான் – கேதா – அகமதாபாத் போராட்டங்கள்.

**கிலாபத் இயக்கம் மற்றும் ஒத்துழையாமை இயக்கம்**

**சட்ட மறுப்பு இயக்கமும், பூனா ஒப்பந்தமும்**

வெள்ளையனே வெளியேறு இயக்கம். -இந்திய விடுதலை

**43.** (5)

Padasalai.Net

| | | |
|---|---|---|
| ஆ | <u>பகத்சிங்கின் தொடக்ககால செயல்பாடுகள்</u> :<br>தனது இளவயதிலேயே நவ்ஜவான் பாரத் சபா, ஹிந்துஸ்தான் ரிபப்ளிகன் அசோசியேஷன் ஆகிய அமைப்புகளில் தன்னை இணைத்துக் கொண்டார்.<br>ஹிந்துஸ்தான் சோசலிஸ்ட் ரிபப்ளிகன் அசோசியேஷனின் தலைவர்களில் ஒருவராக பகத்சிங் விளங்கினார்.<br><u>பகத்சிங்கின் குண்டுவீச்சு</u> :<br>ஆங்கில அரசு தொழிற்தகராறுகள் மசோதாவை அறிமுகப்படுத்த முடிவு செய்தது.<br>இம்மசோதாவை அறிமுகபடுத்திய நாளன்று மத்திய சட்டமன்றத்தின் மீது பகத்சிங்கும் அவரது நண்பர்களும் குண்டு வீசினர்.<br>ஆனால் இந்த குண்டு வீச்சில் யாரும் கொல்லப்படவில்லை.<br><u>இரண்டாவது லாகூர் சதி வழக்கு</u> :<br>சாண்டர்ஸ் கொலை வழக்கில் பகத்சிங் தனது நண்பர்களுடன் கைது செய்யப்பட்டார்.<br>இவ்வழக்கில் பகத்சிங், ராஜகுரு, சுகதேவ் ஆகியோருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது.<br><u>பகத்சிங்கின் முழக்கங்கள்</u> :<br>புரட்சி என்பது மனித குலத்தின் பிரிக்க முடியாத உரிமை என்றார்.<br>ஆங்கிலேய ஏகாதிபத்தியத்திற்கு எதிராகப் ‘புரட்சி ஓங்குக’ என்று முழங்கினார். | |
| 44. அ | <u>ஒற்றுமை சீர்குலைவு</u> :<br>• கூட்டு இந்திய அடையாளம் ஒன்று உருவாவது தடுக்கப்பட்டது.<br>• இந்தியர்களின் ஒருங்கிணைப்பு முயற்சிகள் முறியடிக்கப்பட்டது.<br><u>தனித்தொகுதிகள் அறிமுகம்</u> :<br>• பிரித்தாளும் கொள்கையின் ஒரு பகுதியாக தனித்தொகுதிகள் அறிவிக்கப்பட்டன.<br>• இதன் மூலம் ஆங்கிலேயரின் பிரித்தாளும் கோட்பாடு அரசமைப்பு சட்டத்தில் முறையாக நுழைந்தது.<br><u>உள்ளாட்சி தேர்தல்களில் வகுப்புவாதம்</u> ;<br>• மக்களாட்சி அரசியலில் எதிர்பாராத விளைவுகள் ஏற்பட்டன.<br>• அனைத்துக்கட்சிகளும் குறுங்குழுவாத அணுகுமுறையைப் பின்பற்றின.<br><u>கலவரம் வெடித்தல்</u> :<br>• வட இந்தியாவில் இந்துக்கள் மற்றும் முஸ்லிம்களுக்கிடையேப் பகைமை வளர்ந்தது.<br>• 19ஆம் நூற்றாண்டின் கடைசி பகுதியில் ஏராளமான இந்து-முஸ்லிம் கலவரங்கள் வெடித்தன. | 5 |
| 44. ஆ | போருக்குப் பின்பு இஸ்லாமியர்கள் பெரும்பான்மையாக வாழும் தொடர் மாவட்டங்களைப் பிரித்தல்.<br>அம்மாவட்டங்களில் வாக்கெடுப்பு நடத்தி பாகிஸ்தான் உருவாக்கம் பற்றிய முடிவை எடுத்தல்.<br>ஓட்டெடுப்பின் முடிவில் பிரிவினை உறுதியானால் பொதுவான ஒரு ஒப்பந்தம் ஏற்படுத்த வேண்டும்.<br>அவ்வொப்பந்தத்தில் பாதுகாப்பு, தொலைத்தொடர்பு போன்றவை இடம்பெற வேண்டும்.<br>எல்லையில் அமையப் பெற்ற மாவட்டங்களுக்கு இரு இறையாண்மை கொண்ட நாடுகளில் ஏதோ ஒன்றில் சேர்ந்து கொள்ள வாய்ப்பளிக்கப்பட வேண்டும்.<br>முழுமையான அதிகார மாற்றம் ஏற்பட்டபின் இத்திட்டங்கள் செயல்முறைக்குக் கொண்டு வரப்பட வேண்டும்.<br>‘இராஜாஜி திட்டத்தை’ அடிப்படையாகக் கொண்டு காந்தியடிகள் ஜின்னாவோடு பேச்சுவார்த்தை நடத்த முன்வந்தார்.<br>ஆனால் அந்தப் பேச்சுவார்த்தையில் எந்தமுடிவும் எட்டப்படவில்லை. | 5 |

Padasalai.Net

| | | |
|---|---|---|
| 45. அ | <u>கலகத்தின் தொடக்கம்</u> :<br>HMIS என்ற போர்க்கப்பலின் மாலுமியான B.C தத் என்பவர் அக்கப்பலின் பக்கவாட்டில் வெள்ளையனே வெளியேறு என்று எழுதினார்.<br>இதனையடுத்து அக்கப்பலின் 1100 மாலுமிகள் உடனடியாக போராட்டத்தில் இறங்கினர்.<br>ஆங்கிலேய அதிகாரிகளின் நிறவெறியையும், தரக்குறைவான செயல்பாடுகளையும் கண்டித்தனர்.<br><u>கலகத்தின் பரவல்</u> :<br>பம்பாய் மற்றும் கல்கத்தாவின் தொழிற்சங்கங்கள் போராட்டத்தால் இரு நகரங்களும் போர்முனை போல காட்சியளித்தன.<br>வியாபாரிகள் கடையடைப்பால் பொதுவான வர்த்தகம் பெரிதும் பாதிக்கப்பட்டது.<br><u>விமானப்படை மற்றும் ராணுவ வீரர்களின் ஆதரவு</u> :<br>மாலுமிகள் போராட்டத்திற்கு ஆதரவாக பல்வேறு நகரங்களிலிருந்த ராயல் விமானப்படை ஊழியர்களும் ஆர்ப்பாட்டத்தில் இறங்கினர்.<br>ஜபல்பூரிலிருந்த இந்திய ராணுவ சிப்பாய்களும் போராட்டத்தில் இறங்கினர்.<br><u>கலகத்தின் முடிவு</u> :<br>இக்கலகத்தை பிரிட்டிஷ் அரசு அடக்குமுறையை வெளிப்படுத்தியே எதிர்கொண்டது.<br>தலைவன் இல்லாத இப்போராட்டம் நீண்டநாள் நீடிக்க முடியாததால் மாலுமிகள் இறுதியில் சரணடைந்தனர். | 5 |
| 45. ஆ | <u>சுதேசஅரசுகளை இந்திய ஒன்றியத்துடன் இணைப்பது தொடர்பாக ஏற்பட்ட பிரச்சினைகள்</u><br>○ ஹைதராபாத் நிஜாம் இந்திய ஆளுகைக்கு கீழ்ப்படிய மறுத்து, அவர் ஹைதராபாத் அரசை சுதந்திர அரசு என்று அறிவித்தார்.<br>○ ஜூனாகத் அரசர் மக்கள் விருப்பத்திற்கு எதிராக பாகிஸ்தானுடன் சேர விரும்பினார்.<br>○ காஷ்மீரின் மகாராஜா ஹரிசிங் காஷ்மீரை சுதந்திர அரசாக அறிவித்தார்.<br><u>சுதேசஅரசுகளை இந்திய ஒன்றியத்துடன் , இணைத்ததில் படேல் மற்றும் நேருவின் பங்களிப்பு</u><br>○ இந்திய ஒன்றியத்தோடு இணையும் சுதேச மன்னர்களுக்கு மன்னர் மானியங்கள் வழங்கப்பட்டன.<br><u>ஹைதராபாத் இணைப்பு</u> :<br>○ ஹைதராபாத் நிஜாம் விடுதலைப் பிரகடனம் செய்ததால் மக்கள் நிஜாம் மீதும் அவரது ராணுவத்தின் மீதும் தங்கள் கோபத்தை வெளிபடுத்தினர்.<br>○ இதனைத் தொடர்ந்து தெலுங்கானா மக்கள் இயக்கத்தை கம்யூனிஸ்டுகள் வழி நடத்தினர்.<br><u>ஜூனாகாத் இணைப்பு</u> :<br>○ ஜூனாகத் அரசர் பாகிஸ்தானுடன் சேர விரும்பியதால் மக்கள் கிளர்ச்சி செய்தனர்.<br>○ எனவே படேல் மக்களிடம் பொது வாக்கெடுப்பு நடத்தி அதனை இந்திய யூனியனுடன் இணைத்தார்.<br><u>காஷ்மீர் இணைப்பு</u> :<br>○ பாகிஸ்தானியர்கள் சிலர் காஷ்மீரைச் சூறையாடிய போது மகாராஜா ஹரிசிங்கால் தடுக்க முடியவில்லை.<br>○ ஹரிசிங் இந்தியாவின் உதவியை நாடிய போது படேல் இணைப்புறுதி ஆவணத்தில் கையொப்பம் பெற்று காஷ்மீரை இந்திய யூனியனுடன் இணைத்தார் | 5 |

Padasalai.Net

| | | |
|---|---|---|
| 46. அ | <u>இந்திய வெளியுறவுக் கொள்கையின் அடிப்படைக் கோட்பாடுகள்:</u><br>◦ காலனிய எதிர்ப்பு.<br>◦ இனவெறியை எதிர்த்தல்.<br>◦ வல்லரசு நாடுகளுடன் அணி சேராமை.<br>◦ ஆப்பிரிக்க- ஆசிய ஒற்றுமை.<br>◦ பிற நாடுகளை ஆக்கிரமிக்காமல் இருத்தல்.<br>◦ உலக அமைதி மற்றும் பாதுகாப்பை மேம்படுத்துதல்.<br><u>அணிசேரா இயக்கத்தில் ஆப்பிரிக்க ஆசிய நாடுகளை இணைத்ததில் பிரதமர் நேருவின் பங்கு:</u><br>◦ ஆசிய மற்றும் ஆப்பிரிக்காவின் புதிய நாடுகளை பனிப்போருக்குள் தள்ளும் முயற்சிகளை எதிர்த்தார்.<br>◦ 1955 இல் பாண்டுங் நகரில் ஆப்பிரிக்க, ஆசிய நாடுகளின் மாநாடு நடைபெற்றது.<br>◦ அணிசேரா இயக்கத்திற்கான அடித்தளத்தை பாண்டுங் மாநாடு ஏற்படுத்திக் கொடுத்தது.<br>◦ அணிசேராமையின் முக்கியத்துவம் மற்றும் உலகத்துக்கு அதன் தேவை குறித்து நேரு விளக்கினார்.<br>◦ 1961 இல்அணுசக்தி ஆயுதக்குறைப்பு மற்றும் சமாதானத்திற்கான அழைப்பு விடுத்தார். | |
| 46 ஆ | இந்திய வரைபடம் – ஜுனாகத் , ஹைதராபாத் – தூத்துக்குடி , கல்கத்தா – நாக்பூர் | 5 |
| 47. அ | <u>முதலாவது ஐந்தாண்டு திட்டம்</u> (1951-56) :<br>வேளாண்மையை வளர்ப்பதிலும், வேளாண் உற்பத்தியிலும் கவனம் செலுத்தியது.<br>மொத்த முதலீட்டில் 31 விழுக்காடுகள் வேளாண்மைக்கும் நீர்பாசனத்திற்கும் ஒதுக்கப்பட்டது.<br><u>இரண்டாவது ஐந்தாண்டு திட்டம்</u> (1956-61) :<br>பொருளாதார முன்னேற்றத்தை அடைவதற்கு கனரகத் தொழிற்சாலைகளுக்கு முக்கியத்துவம் வழங்கியது.<br>முதலாவது திட்டத்தில் 6 விழுக்காடாக இருந்த தொழில் துறையின் பங்கு இரண்டாவது திட்டத்திற்குப் பின்னர் 24 விழுக்காடாக உயர்ந்தது.<br><u>முதல் இரண்டு ஐந்தாண்டு திட்டங்களின் மதிப்பீடு</u> :<br>முதலிரண்டு திட்டங்களும் ஓரளவிற்கு மிதமான 4 விழுக்காடு வளர்ச்சியை இலக்காகக் கொண்டிருந்தன.<br>இதைப் பொருளாதார நிபுணர்கள் "இந்து வளர்ச்சி விகிதம்" எனஅழைத்தனர்.<br><u>ஐந்தாண்டு திட்டங்களின் சாதனைகள்</u> :<br>பொருளாதாரம் விரிவடைந்தது.<br>தேசிய மற்றும் தனிநபர் வருமானம் வளர்ச்சியடைந்தது.<br>தொழிற்சாலைகளின் உற்பத்தி அதிகரித்தது.<br>வேளாண் உற்பத்தி அதிகரித்தது. | 5 |

| | | |
|---|---|---|
| 47. ஆ | காலக்கோடு;<br>1930 – தண்டி யாத்திரை<br>1931 - காந்தி - இர்வின்ஒப்பந்தம்<br>1932 - வகுப்புவாரி தொகுதி ஒதுக்கீடு / பூனாஒப்பந்தம்<br>1937 - மாகாணங்களில் முதலாவது காங்கிரஸ் அமைச்சரவை<br>1942 - கிரிப்ஸ் தூதுக்குழு / வெள்ளையனேவெளியேறு இயக்கம்<br>1945 -வேவல் திட்டம் / சிம்லாமாநாடு<br>1946 - அமைச்சரவைத் தூதுக்குழு / நேரடி நடவடிக்கை/ இடைக்கால அரசாங்கம் / இராயல் இந்தியக்கடற்படையின்கலகம்<br>1947 - இந்தியாவிடுதலைஅடைதல்<br>1950 - இந்தியாகுடியரசு நாடாக மாறுதல் | |

Padasalai.Net